# பொது அதிகார ஆவணம்

201_ம் வருடம், _________மாதம், ______ம் நாள், ______________ என்ற விலாசத்தில் வசிக்கும் திரு._________ அவர்களின் குமாரர் சுமார் _________ வயதுள்ள திரு. _________ (அடையாள அட்டை ______) (கைபேசி எண்.______)ஆகிய தங்களுக்கு,

______________ என்ற விலாசத்தில் வசிக்கும் _________ அவர்களின் குமாரர் சுமார் ___ வயதுள்ள திரு._________ ஆகிய நான் (அடையாள அட்டை ______) (கைபேசி எண்.______) மனப்பூர்வ சம்மதத்துடன் எழுதிக் கொடுக்கும் பொது அதிகார ஆவணம் என்னவென்றால்,

இதன் கீழ் சொத்து விவரத்தில் விவரிக்கப்பட்டுள்ள _________ மாவட்டம், _______________ சொத்தானது நான் எனது சொந்த வருவாய் மற்றும் சேமிப்பைக்கொண்டு _________ தேதியிட்ட __________ சார்பதிவக 1 புத்தக ஆவண எண்._______/____ மூலம் கிரையம் பெற்று அது முதல் சர்வ சுதந்திரமாய் ஆண்டனுபவித்துக்கொண்டு வருகிறேன்.

இந்நிலையில் இதன் கீழ் சொத்து விவரத்தில் விவரரிக்கப்பட்டுள்ள சொத்தினை என்னால் நேரடியாக பராமரிக்க முடியாத காரணத்தினால், எனது நம்பிக்கைக்குரிய தங்களை எனது பொதுஅதிகார முகவராக நியமிக்கின்றேன். இதன்படி:-

1. இதன் கீழ் சொத்து விவரத்தில் விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை தாங்கள் மொத்தமாகவோ அல்லது பகுதி, பகுதியாகவோ கிரையம் பேசவும், கிரையத் தொகை பெறவும், உரிய காலத்தில் மிகுதி கிரையத் தொகையினை பெற்றுக்கொண்டு, கிரைய ஆவணம் எழுதிக் கொடுக்கவும், அதுவரையில் சொத்தைப் பொருத்த வரி வகையறாக்களை என்சார்பாக செலுத்தி வரவும் தங்களுக்கு நான் இதன் மூலம் அதிகாரம் அளிக்கின்றேன்.

2. கிரையம் பெறுபவர்கள் தயாரித்து வரும் கிரைய ஆவணங்களில் எனக்காக, என் சார்பாக தாங்களே கையொப்பம் செய்து உரிய சார்பதிவாளர் அலுவலகத்தில் முறைப்படி பதிவுக்கு தாக்கல் செய்யவும், மேற்படி பதிவுக்கு

தேவையான நமூனாக்கள், ரிக்கார்டுகள் ஆகியவற்றில் எனக்காக, என் சார்பாக தாங்களே கையொப்பம் செய்து ரேகை வைக்கவும், முறைப்படி பதிவு செய்து தரவும், தங்களுக்கு நான் இதன் மூலம் அதிகாரம் அளிக்கின்றேன்.

3. மேலும் பிரஸ்தாப சொத்தைப் பொருத்து தேவை ஏற்படின் ரத்து ஆவணம், பிழைத்திருத்தல் ஆவணம், உடன்படிக்கை ஆவணம், அடமானம் ஆவணம், ஒத்தி ஆவணம், இரசீது ஆவணம், செட்டில்மெண்ட் ஆவணம், விடுதலை ஆவணம் மற்றும் இதர ஆவணங்கள் என்சார்பாக எழுதிக் கொடுக்கவும் இந்த அதிகாரம் வழங்கப்படுகிறது.

4. பிரஸ்தாப சொத்தைப் பொருத்து வழக்குகள் ஏதாகிலும் ஏற்பட்டாலும் என்சார்பில் வழக்கறிஞரை நியமித்து வக்காளத்துப் பாரங்களில் கையொப்பம் செய்து வழக்காடவும், வழக்கு தேவையில்லையெனில் வழக்கை ராஜி செய்யவும் அதிகாரம் வழங்கப்படுகிறது.

5. மத்திய, மாநில அரசு அலுவலகங்களில் இச்சொத்தைப் பொருத்து என்சார்பாக ஏதும் விண்ணப்பம் செய்யவும் அதிகாரம் வழங்கப்படுகிறது.

பிரஸ்தாப சொத்தைப் பொருத்து தாங்கள் மேற்க்கொள்ளும் மேற்ச்சொன்ன அனைத்து நடவடிக்கைகள், செயல்கள் யாவும் என்னை நேரடியாகக் கட்டுப்படுத்தும்.

இந்தப் பொது அதிகாரப்பத்திரற்காக வேண்டி நான் கைமாறுத் தொகை ஏதும் தங்களிடமிருந்து பெறவில்லை.

இந்த சொத்தைப் பொருத்து வரவு, செலவு கணக்குகளை தாங்கள் பராமரித்து வந்து நான் கேட்கும் சமயம் என் வசம் ஒப்படைக்க வேண்டியது.

இந்தப்படிக்கு நான் என் மனப்பூர்வமான சம்மத்துடன் கீழ்கண்ட சாட்சிகள் முன்னிலையில் சம்மதித்து எழுதிக் கொடுத்த பொது அதிகாரப் பத்திரம்.

## சொத்து விவரம்